பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 03 புதன்கிழமை 17.01.2024 கதிர் 430

# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர்

## தேடவேண்டும் என்கின்றார் ராஜபக்ச

பொதுவேட்பாளரைத் தேடவேண்டும் என்று பொது ஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் கம லத்தின் அழைப்பினை ஏற்று பொலன்னறுவைக்கு சென்றிருந்த மகிந்த ராஜபக்ச, அங்கு புதிய விகாரையை திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்றார். அதில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்கேற்றிருந்தார்.

நிகழ்வின் பின்னர் ஊடக வியலாளர்கள் கருத்து வெளி யிடும்போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் சம்பந் தமாக நாம் இன்னமும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கையின் பொருளாதார நிலை உறுதிப்பாட்டை நோக்கி முன்னேறுகின்றதுஎன்றும்விரைவில் நாட்டை அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியும் என்றும் ஆளும் தரப்புத் திரும்பத் திரும்ப மார்தட்டிக்கொள்கிறது. ஆனால் கள யதார்த்தம் அப்படி இல்லை. வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு மரக்கறிகளின் விலைகள் வான் தொட்டுள்ளன. ஆனால், அதைப் பற்றிக் கவலைப்படும் அரசியல்வாதிகள் யாருமில்லை.

வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் அனுராதபுர பொதுச் சந்தையில் ஒரு கிலோ கேரட் 2000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தம்புத்தேகமபொருளாதார ☞ 2

## நாடாளுமன்ற கூட்டத்தொடர் இந்த மாதம் முடிவுக்கு வரும்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் ஜனவரி 24ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்ற கூட்டத்தொடரை முடிவுக்குகொண்டுவருவதுதொடர்பான வர்த்தமானியை எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிடவுள்ளார். ஒன்பதாவது ☞ 2

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இதுவரை முடிவு எதுவுமில்லை

## பெரமுனவின் களுத்துறை எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதிவேட்பாளர் குறித்து இதுவரைபொது ஜனபெரமுனஎந்தவொரு தீர்மானத்தையும் எடுக் கவில்லை என்று பொது ஜனபெரமுனவின்களுத் துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் ரோஹித்த அபே குணவர்த்தன தெரி வித்தார்.

களுத்துறையில் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக்கட்சியின்தலை வர். அவரை எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த முடியாது. பொது வேட்பாளராக களமிறங் குவது தொடர்பில் அவர் தான்தீர்மானிக்கவேண் டும். அதுபற்றி நாமும் எந்தக்கருத்துக்களையும் கூற முடியாது.

நாம் பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த வர்கள் எமது கட்சியின் தலைவர்மகிந்தராஜபக்ச. எமது கட்சிக்கு அரசி யல் குழு உள்ளது. அதில் பஸில் ராஜபக்ச உள்ளார். எமது அரசியல் குழுவே அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை கலந்துரையாடி தீர்மா னிக்கும். தற்போது வரையில்நாம்அத்தகை யதொரு தீர்மானம் எடுக்கப்பட ☞ 8

# தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்படும்

## ஜனாதிபதியின் ஆலோசகர் அறிவிப்பு

எதிர்காலத்திற்காக தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்படும், அது உட்பட இன்னும் 4-0 முதல் 50 சட்டங்கள் திருத்தப்படவுள்ளன என்று தேசிய பாது காப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதி பதி பணிக்குழாம் பிரதா னியுமான சாகல ரத்நா யக்க தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெறும் உலகப் பொருளாதார மன் றத்தின் 54ஆவது வருடாந்த ☞ 2

# மலையக மக்களுக்கு காணி வழங்க அரசு 14 மில்லியன் நிதி ஒதுக்கீடு

மலையகத்தில் காணி உரித்துக்குத் தகுதியான மக்களின் காணி உரிமைக்காக 14 பில்லியனுக்கும் அதிகமான தொகையை அரசு ஒதுக்கியுள்ளதாக தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித் தார்.

தோட்ட உட்கட் டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் பேராதனைப் பல்க லைக் களத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் களுடனான சந்திப் பின்போதுமேலும் ☞ 2

# மட்டக்களப்பு பண்ணையாளர்களுக்கு ஆதரவாக யாழ். நகரில் அர்ப்பாட்டம்





மட்டக்களப்பு பண்ணையாளர்களுக்கு நீதிகோரி நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட டம் ஒன்று முன்னெடுக் கப்பட்டது.

நல்லூர் நல்லை திருஞானசம் - ☞ 2

# “பட்டிப் பொங்கல் ஒரு கரிநாள்” மட்டு பண்ணையாளர்கள் பேரணி

'பட்டிப்பொங்கல்பண் ணையாளர்களுக்கு ஒரு கரிநாள்' எனும் தொனிப்பொருளில் மயிலத்தமடு,மாதவனை பண்ணையாளர்கள் மட்டக்களப்பில் பெரும் கவனயீர்ப்புபேரணியில் ஈடுபட்டனர்.

மயிலத்தமடு, மாதவனை பண்ணை யாளர்களின் அறவழி போராட்டத்தின் 124 ஆவதுநாள்பூர்த்தியையும் பட்டிப்பொங்கலையும் முன்னிட்டுநீதிகோரிஇந்த கவனயீர்ப்புபோராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன்,சாணக்கியன், கோவிந்தம் கருணா கரன் மற்றும் பண் ணையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பெருந்திர ளானவர்கள் இந்தக் கவனயீர்ப்பில் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு ☞ 2

# 72 சுகாதார தொழிற்சங்கள் சேர்ந்து பணிப்புறக்கணிப்பு

## இன்று காலை வரையில் தொடர்கிறது

72 தொழிற்சங் கங்கள் நேற்றுக் காலை 6.30 முதல் பணிப் புறக்கணிப்பை தொடங்கின. இன்று காலை 8 மணி வரை இந்தப் போராட்டம் தொடருகின்றது. நிறை வுகாண் மருத்துவ தொழில்வல்லுநர்களின் கூட்டமைப்பின் ஏற்பாட டாளர் ரவீ குமுதேஷ் இதனைத் தெரிவித்தார்.

இந்தப்போராட்டத்தை அடுத்து அரச வைத்தி யசாலைகளில் பாதுகாப் புப் பலப்படுத்தப்பட் டிருந்தது. முப்படை யினரையும் பயன் படுத்தி இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. காலை 6.-30 மணிக்கே வைத்திய சாலைகளில் படையினர் களமிறக்கப்பட்டு பாதுக ாப்பு இறுக்கப்பட்டது.

வைத்தியர்களுக்கு மட்டும் சேவைக்கால இடையூறு, வருகை மற்றும் போக்குவரத்து கொடுப்பனவை 35,000 ரூபாவினால் ☞ 8

# கடன் மறுசீரமைப்பில் இலங்கை வெற்றிகரமான முன்னேற்றமாம்

## லாவோஸில் வைத்து ஜனாதிபதியின் கருத்து

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் இலங் கை வெற்றிகரமான முன்னேற்றம் கண்டுள் ளதாகவும், பிரதான கடன் வழங்குநர்கள் கொள்கையளவில்அதற்கு இணங்கியுள்ளனர் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

2023 ☞ 9

# ஆய்வு அறிக்கை கிடைத்ததும் நடாளுமன்றம் கலைக்கப்படும்

## குருநாகல் எம்.பி. நளின் பண்டார தெரிவிப்பு

களஆய்வுஅறிக்கை கிடைத்தவுடன் நாடாளு மன்றம் கலைக்கப்படும். ரணில் விக்கிரமசிங்க சுனாமிக்குள்சிக்குவதற்கு விரும்பமாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரி வித்தார்.

எதிர்க்கட்சித் ☞ 2

## இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு

# ரணிலின் திட்டத்தை தவிர வேறு வழியில்லை அனைவரும் அதற்கு ஆதரவளிக்கவேண்டும்

## இப்படிக் கேட்கிறார் வஜிர அபேவர்த்தன

இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ர மசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழியில்லை என்று தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனஅனைத்துத் தரப்பினரும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து அந்த வேலைத் திட்டத்தின் வெற்றிக்குப் பங்களிக்க ☞ 8

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இலங்கையில் முதலிட வாருங்கள்

## உலக முதலீட்டாளர்களுக்கு ரணில் அழைப்பு

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரி சக்தி துறையில் முதலீடு செய்வதற்கு இதுவே சிறந்த தருணம். மேலும் இதுபோன்ற முதலீடுகள் எதிர்வரும் தசாப்தங்களில் அதன் பங்குதாரர்களுக்கும் இலங்கை நுகர் வோருக்கும் அதிக வருமானத்தை தரும் என்பதில்எனக்குஎதுவித சந்தேகமும் கிடையாது என்று ஜனாதிபதி ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மத்திய நிலையத்தில் காரட் ஒன்றின் மொத்த விலை 1500 ரூபாவாகவும் சில்லறை விலை 1700 ரூபாவாகவும் உள்ளதாக அந்த நிலையத்தின் தலைவர் சுனில் செனவிரத்ன தெரிவித்தார். ஒரு கிலோ பீன்ஸ் மொத்த விற்பனை விலை 1,000 ரூபாய் என்றும் சில்லறை விலை 1,400 ரூபாய் என்றும் செனவிரத்ன கூறினார்.

மரக்கறி உற்பத்தி குறைந்து போனதே இதற்கான காரணம் என்ற சொல்லப்படுகின்றது. தொடர்ந்து பெய்த மழையால் மரக்கறி உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் சுனில் செனவிரத்ன தெரிவிக்கையில். "வழக்கமாக நாள் ஒன்றுக்கு ஒன்றரை இலட்சம் கிலோ மலையக மரக்கறிகள் பொருளாதார நிலையத்திற்கு கிடைக்கின்றன. ஆனால், நேற்று ஏழாயிரம் கிலோ காய்கறிகளே கிடைத்தன. மூன்று நான்கு மாதங்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் மழையினால் மரக்கறி பயிர்கள் அழிவடைந்தமை இந்த நிலைமைக்கு வழிவகுத்துள்ளது" என்றார்.

ஏற்கனவே கடலுணவு மற்றும் இறைச்சி விலைகள் எகிறிவிட்ட நிலையில் நடுத்தரக் குடும்பங்களே அசைவ உணவுகளைச் சாப்பிட முடியாத நிலையில் இருக்கின்றன. இப்போது மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்திருப்பது இலங்கையின் மத்திய தர வர்க்கத்தையும் பெரியளவில் பாதிக்கின்றது. ஆனால் அது பற்றி ஆளும் தரப்பின-ருக்கு எந்தக் கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை.

நிலமை இப்படியே தொடர்ந்தால் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கும் நிலை விரைவிலேயே ஏற்படும்.

......................

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெலவின் வீட்டின் முன்பாக நேற்று ஒரு வினோதமான போராட்டம் இடம்பெற்றது. மருந்துப் பொருள்கள் இறக்குமதியில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் கெஹலிய மீது தொடர்ச்சியான விமர்சனங்கள் இருந்துவருகின்றன. அதனால் அவரது வீட்டின் முன்பாக அடிக்கடி இப்படிப் போராட்டங்கள் நடப்பது வழமைதானே, இதில் என்ன வினோதம் இருக்கின்றது என்று நினைப்பீர்கள்.

நேற்றைய போராட்டக்காரர்கள் அமைச்சர் கெஹலியவின் வீட்டின் முன்பாக ஒரு செத்தவீட்டுச் சடங்கையே நடத்தினர். அமைச்சர் கெஹலியவுக்கே அவர்கள் இறுதிக் கிரியைகள் செய்தனர். பாடை கட்டி, அதில் அமைச்சரின் உடலைப் படுக்க வைத்து அழுது குளறி ஊர்வலம் சென்று என்று ஒரு இறுதிக் கிரியைக் காட்சிகளை அவர்கள் நிகழ்த்தினர்.

தரமற்ற மற்றும் கலாவதியான மருந்துகளை இறக்குமதி செய்து மக்களைச் சாகடிக்கப் பார்த்தார் என்பதை குறிப்பாலுணர்த்தும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. வாழும் போதே தனது சாவைப் பார்க்கும் வாய்ப்பு எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கிறது. அது அமைச்சருக்கு வாய்த்திருக்கின்றது. அந்த நாடகத்தின் பெயர் "கெஹலியவின் சாவு".

............................

இந்தியா தான் பயன்படுத்திக் கழித்த தொடருந்து இயந்திரங்களை இலங்கைக்குத் தானமாக வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கைக்கு ஒரு உதவியாக இருக்குமே என்பதால் இந்திய இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா தனது தொடருந்துகள் அனைத்தையும் மின்சாரமயமாக்கி வருவன் காரணமாக டீசல் இயந்திரங்களைப் பயன்பாட்டில் இருந்து அகற்றி வருகின்றது. இதுவரை அவ்வாறு 20 இயந்திரங்கள் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. அவற்றில் இரு இயந்திரங்களே இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கின்றது என்று கேட்டால். இந்தியா அன்பளிப்புச் செய்வதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஆனால் இந்த இயந்திரங்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு முன்பாக அவற்றைப் பரிசீலிக்கவென இலங்கையில் இருந்து பெரும் படை பட்டாளமே இந்தியா செல்கின்றது என்பதுதான் வேடிக்கை. அந்தக் குழுவில் 65 பேர் அடங்கியிருக்கின்றனர் என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. அமைச்சர் பந்துல குணவர்த்தன அதனை மறுத்திருக்கிறார் என்றாலும் எத்தனை பேர் செல்கிறார்கள் என்பதை அவர் சொல்லவில்லை.

ஒரு புறத்தில் ஜனாதிபதி நாடு நாடாகப் பயணம் மேற்கொண்டவரும் நிலையில் அதிகாரிகள் தாங்களும் ஏன் தள்ளி நிற்பான் என்று நினைத்தார்களோ என்னவோ....

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

# மக்களை சாவுப் படுக்கையில் தள்ளிவிட்டு ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச் சுற்றுலா

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

மக்களைசாவுப்படுக்கையில்தள்ளும்தீர்மானங்களை எடுக்கும் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க வெளிநாட்டுப் பயணங்களுக்காக குறை நிரப்பு பிரேரணைகள் மூலம் பணத்தை பெற்றுக்கொள்கின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பிரபஞ்சம் திட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொது ஜன பெரமுன ஆளும் தரப்பு நாட்டின் மக்களை சாவுப்படுக்கையில் தள்ளுகின்றது. வற் வரியை அதிகரித்து அந்த மக்களை மீள முடியாது செய்கின்றது. ஆனால் ஜனாதிபதி தனது செலவீனங்களை பூர்த்தி செய்துகொள்வதற்காக வரவு,செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விடவும் அதிகமாக 200 இலட்சம் ரூபாய் வரையில் குறைநிரப்பு பிரேரணை மூலமாக மீண்டும் பெற்றுக்கொள்கின்றார்.

பொதுமக்களை நெருக்கடியில் தள்ளிவிட்டு வெளிநாடுகளுக்கு சுற்றுலாப் பயணங்களை அவர் மேற்கொள்கின்றார். அவருடன் பலர் அதிகாரிகள் என்ற பெயரில் வெளிநாடுகளுக்குச் செய்கின்றார்கள்.

இதுவெல்லாம் யாருடைய பணம்? மக்களின் பணம். அதனை அரசதலைவர்களே வீண்விரயமாக்குகின்றார்கள். நாட்டில் தற்போது சுகாதாரத்துறை இத்தனை தூரம் வீழ்ச்சி அடைந்துள்ளமைக்கு காரணம் சரியான தலைமையொன்று இல்லாமையே என்றார்.

## பொது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிந்திக்கவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியவுடன் அதற்குப் பொருத்தமான வேட்பாளரைக் களமிறக்குவோம். அத்துடன், பொதுவேட்பாளர் ஒருவரையும் தேட வேண்டியுள்ளது என்றார்.

## ஆய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தி யாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியானது தற்போது கள ஆய்வொன்றில் ஈடுபட்டுள்ளது. அந்த அறிக்கையானது அடுத்துவரும் தினங்களில் கையளிக்கப்படவுள்ளது. அந்த அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்த்தவுடன் அடுத்தபடியாக நாடாளுமன்றத்தினைக் கலைப்பார்.

ஏனென்றால் ஆய்வின் முடிவினைப் பார்க்கின்றபோது அவரால் ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்ல முடியாது என்பது தெரிந்துவிடும். அவர் சுனாமியில் சிக்குவதற்கு ஒருபோதும் விரும்பமாட்டார்.

கள யாதார்த்தம் அவ்வாறுதான் உள்ளது. ஆகவே, வெற்றிபெறாதாவொரு ஜனாதிபதி தேர்தலை ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கப்போவதில்லை. நாம் எந்த தேர்தலுக்கும் முகங்கொடுப்பதற்கு தயாராகவே உள்ளோம்.

அதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் பேசப்படுவதாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பொய்யானவை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள், யாருடைய கயிற்றையோ விழுங்கிவிட்டார்கள் போலுள்ளனது.

தண்ணீர் இல்லாத குடத்தினால் என்ன பயன். வெற்றுப்பொக்கேட்டுக்களுடன் நாம் பேசுவதற்கு தயாரில்லை. நாம் யாரும் பேசப்போவதில்லை என்றார்.

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்றார்.

இதேவேளை, நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் கோப் மற்றும் கோபா உள்ளிட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களின் பதவிக் காலங்களும் முடிவடையவுள்ளன. அதற்கமைய நாடாளுமன்ற கூட்டத்தொடர் மீள ஆரம்பமான பின்னர் குறித்த தெரிவுக்குழுக்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளன.

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரம்சிங்க தோட்ட மக்களுக்காக காணித் துண்டுகள் மற்றும் வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் காணி உரிமைகளுக்காக 4 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

89 பிரதேசசெயலகங்களுக்காக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். தேயிலைத் தோட்டங்களை அண்மித்த மலைநாட்டு சுற்றுலாத் தொழிலை மீண்டும் உருவாக்க வேண்டும்;, அவ்வாறே புதிய பல்கலைக்கழகமொன்றையும் மலைநாட்டில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

## "பட்டிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- காந்தி பூங்கா முன்பாக ஆரம்பமான கவனயீர்ப்புப் பேரணி மாவட்ட செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது. மாவட்ட செயலகத்துக்குள் பேரணியில் ஈடுபட்டவர்கள் பிரவேசிப்பதற்கு முற்பட்டபோது, பொலிஸார் பிரதான வாயிலை மூடித் தடுத்து நிறுத்தினார்கள்.

அதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் போராட்டக்காரர்கள் தரப்பினர் சார்பில் பண்ணையாளர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தினார். இச்சமயத்தில் கால்நடைகள் தாக்கப்படுவது தொடர்பில் அவர் வெளியிட்ட தரவுகளை மாவட்டச் செயலாளர் திருமதி முரளீதரன் திருத்திக்கூறினார். 32 கால்நடைகள் மட்டுமே தாக்கப்பட்டதாகத் தனக்கு தகவல் தரப்பட்டிருப்பாக அவர் வெளிப்படுத்தினார். எனினும், அவரது தகவல் அதிகாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதாகவும், அவர்கள் கட்சி சார்ந்து செயற்படுகின்றனர் எனவும் சாணக்கியன் சுட்டிக்காட்டிகாட்டமான வார்த்தைகளை பிரயோகித்தார்.

இதனையடுத்து மாவட்ட செலகத்துக்குள் போராட்டக்காரர்களை அனுமதித்த மாவட்டச் செயலாளர் அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அப்போது, ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி மற்றும் கால்நடைகள் தாக்கப்படுகின்றமை சம்பந்தமாக எடுத்துரைக்கப்பட்டது. அத்தோடு, மாவட்டச் செயலாளருக்குப் பண்ணையாளர்கள் சார்பில் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினையை கண்டித்து திருகோணமலை - கன்னியாவிலும் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நேற்று இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் தென் கயிலை அகத்தியர் அடிகளார் உட்பட சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் கலந்துகொண்டு நீதிகோரிக் கோசங்களை எழுப்பினார்கள்.

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தர் ஆதீனத்திற்கு முன்பாக தமிழர் ஒருங்கிணைந்த கட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது நாடா ளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், சைவ மகா சபையினர், மததலைவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மயிலத்தமடு, மாதவனை பண்ணை யாளர்களால் இன்றைய தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபொரும் கவயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொழிலாளர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்துடன் இணைந்ததாக நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார மற்றும் அரச துறைகளை உள்ளடக்கிய விரிவான அணுகுமுறை முக்கியமானது.

பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசு பல விரிவான மாற்றங்களை ஆரம்பித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தீர்க்கமான நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இந்தச் செயல்முறை நிறைவடையும் வரை காத்திருக்காமல், அதற்கு முன்னர் இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆரம்ப நடவடிக்கைகளுக்குப் பின்னர், நிர்வாகச் சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான ஒரு விரிவான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது ஊழல் எதிர்ப்புச் சட்டம் போன்ற முக்கியமான சட்டங்களை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டிய ஆணையாளர்களை அரசமைப்பு பேரவை ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கும் செயல்முறையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் சர்வதேச தரத்திற்கு ஏற்ப தரத்தை உயர்த்தும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆட்சிப்பொறிமுறைக்கு கணிசமான சட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட வேண்டும்;, அவற்றில் சுமார் 20 சட்டங்கள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எதிர்காலத்துக்காக, தொழிலாளர் சட்டங்கள் உட்பட 40 முதல் 50 புதிய சட்டங்கள் வரைவு செய்யப்படும். தற்போதுள்ள 40 முதல் 50 சட்டங்கள் நவீன மற்றும் முன்னோக்கு கட்டமைப்பில் ஒருங்கிணைக்கப்படும் என்றார்.



# "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் 15,000 புதியவீட்டு கடன்கள் இம்மாதம்

"அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் 15,000 புதிய வீட்டுக் கடன்கள் வழங்கும் பணிகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீடு திருத்த வேலைகளுக்காக இந்த வீட்டுக்கடன்கள் வழங்கப்படும் என அதன் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்கள் ஊடாகப் பயனாளிகளுக்கு இந்த வீட்டுக்கடன்கள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்த ஆண்டு வீடமைப்பு அபிவிருத்திக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு 7,650 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் முதல் வேலைத்திட்டமாக "அனைவருக்கும் வீடு" வீடமைப்பு கடன் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கிடையில், கடந்த காலத்தில் பல்வேறு அரசாங்கங்களால் ஆரம்பிக்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட 98,000 வீடுகளின் கட்டுமானப் பணிகளை விரைவாக முடிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அதற்கு 24,000 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக அதிகார சபை கூறுகிறது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வரும் 101 கிராமங்களில் 07 கிராமங்களில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்தார்.

இது தவிர, 94 கிராமங்களில் 2,063 வீடுகள் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 690 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 337 வீடுகளின் நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தலைவர் குறிப்பிடுகின்றார்.

இதன்படி மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, கண்டி, வவுனியா, பதுளை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கிராமங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இதுதவிர மாத்தளை, கிளிநொச்சி மற்றும் புத்தளம் மாவட்டங்களில் சில வீட்டுக் கிராமங்களின் நிர்மாணப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக செலவிடப்படும் மொத்தத் தொகை 1,200 மில்லியன் ரூபாவாகும். இதில் 803 மில்லியன் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகளின் இறுதிக்கட்டத்தில் வீடுகளுக்காக 397 மில்லியன் ரூபா பெறப்படும் என்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்திய உதவியின் கீழ் அமுல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஒரு பயனாளிக்கு 5 லட்சம் ரூபாவும், திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் 100,000 ரூபாவும் மொத்தமாக 6 லட்சம் ரூபாவும் உதவித்தொகை மீளப் பெறாத அடிப்படையில் வழங்கப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

கடந்த 2020-2023 ஆகிய மூன்று ஆண்டுகளில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நாடு முழுவதும் நிர்மாணிக்க ஆரம்பித்த 37,356 வீடுகளில் 30,894 வீடுகளைப் பூரணமாக நிர்மாணித்து முடித்துள்ளது.

மேலும் 6462 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைய உள்ளதாகவும் அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. உங்களுக்கு வீடு - நாட்டுக்கு நாளை, மிஹிந்து நிவஹன, விரு சுமித்துரு, செவன மற்றும் சேவாபிமானி உட்பட 15 வீடமைப்பு உதவித் திட்டங்களின் கீழ் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத் திட்டங்களுக்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ.18717.771 மில்லியன் ஆகும். இதுவரை 17146.078 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட திட்டங்களுக்குத் தொடர்புடைய திறைசேரி நிதி, செவன நிதி, உள்ளக உற்பத்தி மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் பெறப்பட்ட பணத்தின் மூலம் வீட்டுத் திட்டங்களுக்கான பணம் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவிக்கிறது.

(05)

# அரச சேவையாளர்களின் செலவுகளை கட்டுப்படுத்தும் சுற்றறிக்கை வெளியீடு

## சலுகைகளிலும் மட்டுப்பாடுகள்

அரசசெலவுகள் உயர்வடைந்துள்ள நிலையில், அரச வருமானம் மட்டுப்படுத்தப்பட்டதால் அரச சேவையாளர்களின் செலவுகளை மட்டுப்படுத்தும் வகையில் நிதியமைச்சு விசேட புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அரச சேவையாளர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவு அவர்களின் அடிப்படை சம்பளத்தை அண்மித்ததாக அமையக் கூடாது. அத்துடன் அரச சேவையாளர்களுக்கு வழங்கபட்ட எரிபொருள் கொடுப்பனவு உள்ளிட்ட பல சலுகைகளுக்கு மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் அல்லது அந்த நிறுவனங்களை மூடுவதற்கான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரச செலவுகள் உயர்வடைந்துள்ள நிலையில் அரச வருமானம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அரச சேவையாளர்களின் செலவுகளை மட்டுப்படுத்தும் வகையில் திறைச்சேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன விசேட சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார்.

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதான செயலாளர்கள், திணைக்களத்தின் பிரதானிகள், மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரசமைப்பு சபை அல்லது அரச நிறுவனங்களின் பிரதானிகள் அனைவருக்கும் புதிய சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசசெலவுகள் உயர்வடைந்துள்ள நிலையில் அரச வருமானம் மட்டுப்படுத்தப்பட்டதால் அரச சேவையாளர்களின் செலவுகளை மட்டுப்படுத்தும் வகையில் திறைசேரி செயலாளர் விசேட சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய அரச சேவையாளர்களுக்கான மேலதிக கொடுப்பனவு, விடுமுறை தின கொடுப்பனவு, பயணச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் என்பன விசேட மானியங்கள் திட்டமிடலுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

அத்துடன் சேவையில் இருத்தல் அல்லது சேவைக்கு சமுகமளித்தலை உறுதிப்படுத்த தவறும் பட்சத்தில் மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது. மாதாந்த மேலதிக கொடுப்பனவு அடிப்படை சம்பளத்தை விட அதிகமாகக் கூடாது.

சாதாரண கடமைகளுக்கு வருகை தருதல் அல்லது வேறு போக்குவரத்து வசதிகளுக்காக இனிமேல் அரச நிதியை பயன்படுத்த முடியாது. சொந்த வாகனம் உள்ள அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து செலவுகளுக்காக செலவுகளை பெற்றுக் கொள்ளும் அதிகாரிகள் இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் இருப்பில் உள்ள வாகனத்தை பயன்படுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது. அத்துடன் எரிபொருள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறும் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச அதிகாரிகள் வெளிநாடு செல்லும் போது அதனுடன் தொடர்புடைய வெளிநாட்டு நிறுவனம் அல்லது உரிய தரப்பினர் அந்த வெளிநாட்டு பயணத்துக்கான செலவுகளை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அரச நிதியை இனி வெளிநாட்டு பயணங்களுக்கு பயன்படுத்த முடியாது.

திறைசேரியின் முழுமையான அனுமதி இல்லாமல் அரச தேவைகளுக்காக கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெறுவதை உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது.

புதிய சுற்றறிக்கைக்கு அமைய தேசிய நிதியத்தை பாவிக்கும் போது புதிய செயற்திட்டங்கள் ஏதும் மறு அறிவித்தல் விடுக்கும் வரை ஆரம்பிக்க கூடாது. முகாமைத்துவ திணைக்களத்தின் முறையான வழிகாட்டலின்றி அரச சேவைக்கு ஆள்களை இணைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

அரச சேவையாளர்களுக்கான கூட்டங்கள், செயற்திட்ட தெளிவூட்டல்கள், மாநாடு மற்றும் பயிற்சி வழங்கல் என்பன நிகழ்நிலை முறைமை ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களில் மின்சாரம், நீர், தொலைபேசி சேவை, எரிபொருள் மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்ட சேவைகளுக்கான செலவுகளை மட்டுப்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கை நிறுவன மட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கொள்கை அடிப்படையில் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதற்கமைய நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் அல்லது அந்த நிறுவனங்களை மூடுவதற்கான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுப்பதுடன், சாதாரண சேவைகளுக்காக நிறுவனங்களை ஒன்றிணைத்தல், கூட்டிணைக்கப்பட்ட சேவைகளை பயனுடைய தாக்குதல், அரச முயற்சியாண்மையின் நிதி நிலைமையை உறுதிப்படுத்தல் அத்தியாவசியமானது என புதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

# அழிவடைந்துள்ள தேசத்தைக் காப்பாற்ற விழித்தெழாவிட்டால் நாம் மனிதர்களல்லர்

## அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டு



அரசியலில், பொருளாதாரத்தில் மற்றும் மனித வாழ்க்கையில் மாத்திரம் நெருக்கடி இருப்பதில்லை. மக்களின் சிந்தனையிலும் அவ்வாறுதான் இருக்கிறது. நாம் சரியாக அவதானித்தால் கடந்த நாடாளுமன்றத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் யார் என்பது புலப்படும். குருணாகலில் ஜோன்ஸ்டன், கண்டியில் மஹிந்தானந்த, இரத்தினபுரியில் சொக்கா மல்லி, களுத்துறையில் ரோஹித அபேகுணவர்தன, அதைப் போலவே, கம்பஹாவில் பிரசன்ன ரணதுங்க போன்றோர் தெரிவு செய்யப்பட்டனர். பிரசன்ன ரணதுங்க கப்பம் வாங்கியமைக்காக நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க.

தேசிய மக்கள் சக்தியின் கண்டி தொகுதி மகாநாடு கண்டியில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் -

மேலும், அநுராதபுரத்தில் எஸ்.எம்.சந்திரசேனவும் தெரிவு செய்யப்பட்டார். இவர்கள் பலவந்தமாக நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தவர்கள் அல்லர். நாட்டுமக்களின் வாக்குகளாலேயே இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். எனவே, பொருளாதாரத்தில் மாத்திரமா சீரழிவு இருக்கிறது?

எமது நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன. மனித சிந்தனைகள் சீரழிந்திருக்கின்றன. எனவே, எம் கண்ணெதிரே இருப்பது ஓர் அழிவடைந்த தேசமாகும். நாம் ஒரு தீர்வு கட்டமான திருப்புமுனைக்கு வந்துள்ளோம். இந்த ஆட்சியாளர்களால் இன்று நாட்டில் அரிசி, எரிபொருள் மற்றும் ஔடதங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு தோன்றியுள்ளது. கடன் செலுத்தமுடியாத நாடாக மாறியிருக்கிறோம். வாழ முடியாத ஒரு நாடாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது.

சட்டம் அமுலாக்கப்படாத, ஒழுக்கமில்லாத, போதைவஸ்துக்கள் நிரம்பிய மற்றும் குற்றச் செயல்கள் மலிந்த ஒரு நாடே இன்றைய பெறுபேறு இருக்கிறது. இதே பயணப்பாதையில் சென்று நாம் செத்து மடியப் போகிறோமா? இல்லையென்றால் ஒன்றாக எழுச்சிபெற போகின்றோமா? மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

எம்மிடம் சுலபமான வழியும் இருக்கிறது. அதாவது, எவ்வித பிரச்சினையும் இன்றி எல்லோரும் இதே அழிவுப் பாதையில் சுடுகாட்டை நோக்கி பயணிக்கவும் முடியும். இல்லையென்றால், நாம் திடசங்கற்பத்துடன், ஒன்றாக எழுச்சி பெற வேண்டும். சுடுகாட்டுக்குச் செல்லும் பாதையை நிராகரித்து நாம் எழுச்சி பெறுவோம் என்ற பிரேரணையை முன்வைக்கவே கண்டி நகரில் நாமனைவரும் திரண்டிருக்கிறோம்.

இந்த ஆட்சியாளர்களிடம் இருந்து இதைவிட எவ்வாறன பெலென்ஸ் சீட் கிடைக்கப்போகிறது. எந்த துறையில் நாம் வென்றிருக்கிறோம்; எந்த துறையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. எந்த துறையை பற்றிய எதிர்பார்ப்பு இருக்கிறது என்று எவராவது கூற முயுமா? இப்பொழுதும் நீங்கள் விழித்தெழாவிட்டால் இனி ஒருபோதுமே எழுச்சிபெற மாட்டீர்கள். (05)

# லசந்தவையும் வாசிம் தாஜூடீனையும் கொலைசெய்தது யார் என்பது தெரியும்

## மேர்வின் அதிரடிக் கருத்து



லசந்த விக்கிரமதுங்க வாசிம் தாஜூடீனை கொலை செய்தவர்கள் யார் என்பது எனக்கு தெரியும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இருவரும் கொலை செய்யப்பட்டவேளை ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சராக பணியாற்றிய மேர்வின் சில்வா உரிய நேரத்தில் இந்த கொலைகளிற்கு யார் காரணம் என்பதை அம்பலப்படுத்துவேன் எனத் தெரிவித்துள்ளார். சிரச தொலைக்காட்சி மீதான தாக்குதலிற்கு யார் காரணம் என்பதும் தனக்கு தெரியும் என மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வந்த லசந்த விக்கிரமதுங்க கொல்லப்படும்போது அவ்வேளை பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக நீதிமன்ற வழக்கை முன்னெடுத்திருந்தார்.

வாசிம் தாஜூடீன் கார் விபத்தில் உயிரிழந்தார் என முதலில் அறிவிக்கப்பட்டது பின்னர் விசாரணைகளின் போது அது கொலை என்பது தெரிய வந்தது. (05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தெளிவான கொள்கை அவசியம்

சுகாதாரத் துறையைச் சேர்ந்த 72 தொழிற்சங்கங்கள் நேற்று ஒருங்கிணைந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால் அரச வைத்தியசாலைகள் அனைத்தும் கிட்டத்தட்ட முடங்கின.

அரசு மருத்துவர்களுக்கு மட்டும் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்துவதற்காகவே இந்தப் போராட்டம் இடம்பெற்றது. இது தொடர்பில் அமைச்சருடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளது. எனினும் இன்று காலையுடன் போராட்டம் முடிவுக்கு வரவுள்ளது.

அரச ஊழியர்கள் தொடர்பில் ஒட்டுமொத்தமாக சம்பள அதிகரிப்பு மற்றும் கொடுப்பனவு உயர்வுகள் தொடர்பான கொள்கை முடிவாக அன்றி சுகாதாரத் துறையில் ஒரு பகுதியினரான மருத்துவர்களுக்கு மட்டும் கொடுப்பனவை அதிகரித்தமையே போராட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை. அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை கடந்த வரவு செலவுத் திட்டத்தில் 10 ஆயிரம் ரூபாயால் அதிகரித்திருந்தது. இந்தக் கொடுப்பனவு போதாது, குறைந்தபட்சம் 30 ஆயிரம் ரூபாயால் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்று தொழிற்சங்கங்கள் வலியுறுத்துகின்றன. அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவை ஈடுகட்டுவதற்கு இந்த அதிகரிப்புக்கூடப் போதாது என்கின்றன தொழிற்சங்கங்கள்.

இந்த நிலையில் சுகாதாரத்துறையில் ஒரு பகுதியினருக்கு மட்டும் மேலும் கொடுப்பனவுகளை அதிகரித்திருப்பதே அமைதியின்மையைத் தோற்றுவித்துள்ளது. பொருளாதார நிலமையைக் கருத்தில் கொண்டு அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பில் எடுக்கப்படக்கூடிய எந்தவொரு முடிவும் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். அதில் ஆளும் தரப்பு விட்ட தவறே இந்தப் போராட்டத்திற்கான காரணம்.

இப்போது சுகாதாரத்துறையினருக்கு கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டால் ஏனைய அரச துறைகளின் ஊழியர்கள் பேசாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. தமக்கும் அதே அதிகரிப்பு வேண்டும் என்று கேட்டு அவர்களும் போராட்டங்களில் குதிப்பார்கள்.

எனவே, அரசு பிரச்சினை என்னவென்பதை ஆராய்ந்து அதற்கான தீர்வைக் கண்டடைய வேண்டும். அதைவிடுத்து ஒரு சில தரப்பினரை மட்டும் திருப்திப்படுத்தும் வகையில் முடிவுகளை எடுத்தால் இதுபோன் பிரச்சினையை எதிர்கொண்டேதான் ஆகவேண்டும். இனியாவது ஆளும்தரப்பு இது விடயத்தில் தீர்க்கமாகச் சிந்தித்து தெளிவான கொள்கையோடு செயற்படுவது அவசியம்.




# ரணில் மீண்டும் போட்டியிடுவாரா?

**உபுல் யோசப் பெர்னான்டோ**

1999 ஜனாதிபதித் தேர்தலின்போது அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் பரப்புரை மேடை குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் பதற்றமடைந்தார். அடுத்த 24 மணி நேரத்தில், சந்திரிகாவை கொலை செய்யப் பிரபாகரனை ரணில் வேலைக்கு அமர்த்தினார் என்ற செய்திகள் அரச ஊடகங்களில் நிரம்பி வழிந்தன. குண்டு வெடித்தவுடன் ரணிலின் பரப்புரைக் குழுவினர் அவசரமாக அவரைச் சந்தித்தனர். அவர்களில் ஒருவர் இலங்கையின் முக்கிய ஊடக நிறுவனமொன்றின் உரிமையாளராக இருந்தார்.

"குண்டு வெடித்த தினத்தன்று சந்திரிகாவுக்கு அதிர்ஷ்டம் இருந்தாலும், அவரது உயிருக்கு ஆபத்து இருப்பதாக ஜோதிடர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்..." என ரணிலிடம் தெரிவித்தார்.

ஆனால் ரணிலோ ''இரண்டு கண்களா, ஜனாதிபதிப் பதவியா என்று கேட்டால் இரண்டு கண்களைத்தான் தேர்ந்தெடுப்பேன். ஜனாதிபதி பதவி தற்காலிகமானது. இரண்டு கண்களும் நிரந்தரமானவை..." என்றார் ரணில்.

அதுதான் ரணில். ரணில் அரசியலுக்காக தனது வாழ்க்கை முறையை பணயம் வைக்கும் தலைவர் அல்லர். தனக்கோ, தன் உயிருக்கோ, தன் குடும்பத்திற்கோ எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்பதற்காக, தனது அரசியல் எதிரியுடன் எப்போதும் இரகசிய ஒப்பந்தங்களைப் பேணி வந்தார்.

ஜனாதிபதியாகி உடலை நசுக்குவதைவிட எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது தனது உடலுக்கு நல்லது என்று அவர் எப்போதும் நினைத்தார்.

ரணில் 1999 ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார். ஆனால் பிரபாகரனின் வெடிகுண்டு காரணமாக அவர் தோல்வியடைந்தார். 2005இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறும் நிலையில் இருந்தார். அந்த நேரத்திலும் பிரபாகரனின் வாக்குப் புறக்கணிப்பு காரணமாக அவர் தோல்வியடைந்தார்.

இதையடுத்து, அதிபர் தேர்தலில் பங்கேற்பதில் அவருக்கு தயக்கம் ஏற்பட்டது. 2010இல், அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது விருப்பத்தைசுட்டிக்காட்டிஓர் அறிவிப்பைவெளியிட்டார், ஆனால் அந்த அறிக்கை போட்டியிடுவதற்கான உறுதிப்பாட்டைக் குறிக்கவில்லை. அந்தக் காலப்பகுதியில் மங்கள மற்றும் ஜே.வி.பி.க்கு இடையில் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வந்தன என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். இருந்த போதிலும், அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு அழுத்தம் கொடுத்தார். ஏனெனில் தனது பதவியைக் காத்துக்கொள்வதற்காகத்தான்.

மகிந்த வெற்றி பெற்றால், எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அஞ்சிய ரணில், மகிந்தவுடனான பேரம்பேசத் தயங்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு நடுவே கோத்தபாயவை இரகசியமாகச் சந்தித்து தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தினார். பொன்சேகாவிடமிருந்து பிரதமர்




2001ஆம் ஆண்டு சந்திரிகாவின் ஆட்சியில் இருந்து வெளியேறிய எஸ்.பி.திஸநாயக்க மற்றும் அவரது அணியினர் ரணில் மற்றும் சந்திரிகா இடையேயான ஒப்பந்தத்தை உடைக்க முயன்றனர் ஆனால் அது வெற்றியடையவில்லை.

ரணில் மற்றும் மகிந்தவுடனான ஒப்பந்தத்தை முறியடிக்க மங்களவும் சிறீபதியும் முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. இதற்காக மைத்திரிபாலவும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் ரணில் தனது பரிவர்த்தனைகளை நிறுத்தவில்லை. அதனால்தான் பதவியைப் பெற முடியாது என்பதை உணர்ந்த அவர், ஜனாதிபதித் தேர்தலின் நடுவில் திடீரென பொன்சேகாவின் ஆதரவை வாபஸ் பெற்றார்.

பல சந்தர்ப்பங்களில், பொது வேட்பாளரை நியமிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறுவதை நன்கு அறிந்திருந்தபோதும், 2015 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது விருப்பத்தை அவர் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். இந்தக் காலகட்டத்தில், தான் ஜனாதிபதியாவதற்கு முயற்சி செய்வதற்கு முன்னர்

தொடர்ச்சி 5 ம் பக்கம்.....

# ரணில் மீண்டும் போட்டியிடுவாரா?

4 ம் பக்க தொடர்ச்சி.....

பொன்சேகாவின் அணுகுமுறையை நினைவுபடுத்தும் ஒரு மூலோபாயத்தில் ஈடுபட்டார். பொது வேட்பாளராக மைத்திரிபால தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான வியூகங்களை வகுத்து, தன்னை நிறைவேற்று பிரதமராக நிலைநிறுத்திக் கொண்டார். பின்னர் அவர் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்னரே பிரதமராகப் பொறுப்பேற்றார்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போகிறார் என்று ஒன்றுக்கு மேற்பட்ட முறை அவர் குறிப்பிட்டுள்ளார். கட்சி சஜித்தை வேட்பாளராக நியமித்தபோது, சஜித்தின் கீழ் பிரதமர் பதவியை பெறும் விளையாட்டில் அவர் தலையிடவில்லை. எனினும், ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்தவுடன் ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டார். தனது மற்றும் மைத்திரியின் பாவங்களைச் சுமந்த சஜித் தோற்றுப் போவதை அவர் அறிந்திருந்தார், அந்தத் தோல்விக்குப் பிறகு சஜித்தின் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே அவரது உத்தியாக இருந்தது.

தன்னைத் தவிர்த்து கட்சியின் சார்பில் ஒரு பொ-து வேட்பாளரை 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த அவர் மறுத்துவிட்டார். ஏனெனில் அந்தப் பொது வேட்பாளர் பின்னர் கட்சியின் தலைவராக வந்துவிடுவார் என்கிற அச்சமே. பொது வேட்பாளர் இல்லாதவரையில் வென்றா-லும் தோற்றாலும் தானே கட்சித் தலைவர் என்பது ரணிலுக்குத் தெரியும். 2019 இல், அப்படிப்பட்ட நிபந்தனையை விதிக்கக்கூடிய இடத்தில் அவர் இல்லை. ஏனெனில் வேட்பாளரின் பெயர் சஜித். அப்படியிருந்தபோதும் சஜித் தோற்கடிக்கப்பட்டதும் கட்சி ரணிலையே தலைவராக அங்கீகரித்தது.

30 முதல் 35 லட்சம் வாக்குகள் இருக்கும்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட பயந்த ரணில் இப்போது இரண்டு லட்சத்துடன் போட்டியிடுவாரா...?

பொதுஜன பெரமுன அவரை வேட்பாளராக முன்னிறுத்த முடிவு செய்தால் மட்டுமே அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவிப்பார். அந்தக் கட்சி அவரை முன்னிறுத்தாவிட்டால், பதவிக் காலம் முடிந்ததும் ஓய்வு பெறுவார். அவர் வெளியேறும் போது, ஓய்வுபெறும் ஜனாதிபதிக்கு வழங்கப்படும் சலுகைகளுக்கு அவர் உரித்துரைடயவராக இருப்பார்.

ஜனாதிபதிபதவியைவகிக்கும்தலைவரான ரணில் குறைவான வாக்குகளைப் பெற்று தோல்வியை சந்திக்கத் தயங்குகிறார். இந்த அச்சம் 1994இல் விஜேதுங்கவிடமும், 201இல் மைத்திரியிடமும்கூடக்காணப்பட்டன. ஐ.தே.க. 4 மில்லியன் வாக்குகளைப் பெற்றுவந்த காலத்திலும் விஜேதுங்க அச்சமடைந்தார். அதேபோன்று, சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு 1.2 மில்லியன் வாக்குகள் கிடைத்து வந்த காலத்திலேயே மைத்திரி அச்சமடைந்தார். தற்போது ரணிலோ வெறும் இரண்டு இலட்சம் வாக்குகளை வைத்துள்ளார். எனவே அவர் அச்சமடைவது நியாயமானதுதானே!

பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ஐ.தே.க வேட்பாளர்களும், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து மாறி அமைச்சுப் பதவிகளைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணிலை மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக ஆக்குவதற்கு முனைப்புக் காட்டுகின்றனர். தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில், கட்சியின்



செயற்குழுவைக் கூட்டி, ஆலோசித்து, முறைப்படி முடிவை அறிவிப்பதே ஐ.தே.கவின் வழக்கம். ஆனால், இப்போதோ ரணில்தான் ஜனாதிபதி வேட்பாளர் என்று இரண்டு அல்லது மூன்று நபர்கள் கூடி முடிவு செய்து செய்திகளை வெளியிடுகிறார்கள். இது ரணிலின் மரியாதையைக் குறைக்கும் செயல்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களை நியமிக்கும் பாரம்பரியப்படி ரணிலே வேட்பாளர் என்று தீர்மானிக்கப்பட்டு, அது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இருந்து வரவேண்டும். ஆனால் இதுவரை அப்படிப்பட்ட அறிவிப்பு வரவில்லை. இதனால், ரணிலை நம்பியிருக்கும் ஐ.தே.க அமைச்சர்களும் உறுப்பினர்களும் கவலையுடனும், நிச்சயமற்றவர்களாகவும் உள்ளனர். ஒருவேளை ரணில் போட்டியிலிருந்து விலகிக்கொள்ளக்கூடுமோ என்கிற அச்சமே அதற்குக் காரணம். இந்த அச்சமே 2022இல் ரணில் பிரதமராக பதவியேற்றதில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஆட்கள் ஐ.தே.க. பக்கம் தாவுகின்றார்கள் என்று செய்திகளை அவர்கள் பரப்பி வருவதற்குக் காரணம். ஆனால், ரணிலின் ஜனாதிபதிப் பதவி முடிவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையிலும் அந்தச் செய்திகளில் எதுவும் உண்மையாகவில்லை.

இப்போது இந்தகைய செய்திகளை மக்கள் நம்புவதேயில்லை. அவர்கள் அவற்றைக் கேட்டுக்கேட்டுசலிப்படைந்து போனார்கள். மறுபுறத்தில் சஜித் ஏற்கனவே பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம் பக்கம் ஈர்க்கத் தொடங்கிவிட்டார். மலையகத்தைச் சேர்ந்த வடிவேல் சுரேஷைத் தவிர ஐக்கிய மக்கள் சக்தி அல்லது பொது ஜன பெரமுனவில் இருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக்கூட ஐக்கிய தேசியக் கட்சியில் இணைப்பதற்கு ரணிலால் இதுவரை முடியவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து நீக்கியதை அடுத்து வடிவேல் சுரேஷ் வெளியேறினார். அண்மையில் சமிந்த விஜேசிறி வெளியேறியதும் ஊடகங்கள் துள்ளிக் குதித்தன. ஆனால் அவரோ நாடாளுமன்றத்தில் சஜித்தை பாராட்டிவிட்டே வீட்டிற்கு சென்றார். அதனையே ஐக்கிய மக்கள் சக்தியின் சரிவு என்று ரணிலுக்கு ஆதரவான ஊடகங்கள் ஊதிப் பெருப்பிக்கின்றன.

ஏனென்றால், ரணிலின் ஆட்சி மக்களின் ஆதரவில் இயங்கவில்லை, ஊடகங்களின் ஆதரவில் மட்டுமே இயங்குகிறது. இதனை அறியாதவர்கள் யாரும் இல்லை என்பதே கள யதார்த்தம்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தேசிய மாநாட்டில் ஈரோஸ் அறிவிக்கும்!



தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தேசிய மகாநாட்டில் அறிவிக்கவுள்ள ஈரேஸ் ஜனநாயக முன்னணி தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவதென்பது முக்கியமான விடயம். எழுந்தமானமாக அதற்கான பதிலை கூறிவிடமுடியாது அந்த தெரிவு தமிழ்பேசும் சமூகங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதிலுள்ள சாதகபாதக நிலைகளை ஆராய்வதோடு தமிழ் சமூக அரசியல் ஆய்வாளர்களின் கருத்துகளையும் அறிந்து கட்சியின் பொதுக்குழுவில் விவாதித்து எமதுதீர்மானத்தைமக்கள்முன்சமர்ப்பிப்போம் என ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சியின் பொதுக்குழுகூட்டத்தின்பின்னர்ஊடகங்களுக்கு கருத்துவெளியிடுகையிலேயேஅவர்இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் திருமலை மாவட்டத் தலைவருமான கதிர் திருச்செல்வம், பொருளாளர் க.சிறிஸ்கந்தராஜா ஆகியோரும் இணைந்திருந்தனர்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர் -

நாடுதற்போதுமிகமோசமானபொருளாதார நெருக்கடிக்கடியாலும் அரசியல் ஸ்திரமின்மையாலும் மக்க ளின் வாழ்நிலை சூழல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்பேசும் மக்கள் ஒடுக்குமுறைகளாலும் இனப்பாகுபாடுகளா லும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நாட்டில் சிங்கள் மக்கள் உட்பட அனைவரும் பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் மூன்று வேலை உணவருந்தி வெகு நாள்களாகிவிட்டது இளைஞர்களினதும் மக்களினதும் போராட்டத்திற்கு தாக்குபிடிக்க முடியாமல் இருந்தவர் நாட்டைவிட்டு ஓடியநிலையில் இலங்கை மீட்டெடுக்கப் போவதாக கூறிக்கொண்டு அவசர அவசரமாக நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தன்னை நிலைப்படுத்திக்கொண்டார்.

ஆனால் இருந்ததைவிட தற்போது நிலைமை மோசமடைந்துள்ளது அவருடைய ஆட்சியில் மக்களின் ஜனநாயக உரிமைகள் கேள்விக்குள்ளாக்கும் படுகிறது தமிழ்பேசும் மக்களின் பூர்வீக காணிகள் 'தொல்பொருள்'என்ற பெயரில் கபடத்தனமாக கபளிகரம்செய்யப்படுகின்றது. தமிழ் மக்களிடம் ஆயுத பலம் இருந்தபோது பிராந்தியங்களின் ஒன்றியம் 13 பிளஸ் என்றெல்லாம் பேசியவர்கள் இன்று 13 ஐயும் தரமறுக்கின்றனர் இன்னொரு பக்கம் இந்தநாட்டை பொருளாதார ரீதியாக தூக்கி நிறுத்திய மலையகத்தமிழர்களின் வரலாறு இந்த நாட்டில் 200 வருடங்களை கடந்தும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்ந்துவதிலும் காணி உரிமையை வழங்குவதிலும் இந்த நாட்டை மாறிமாறி ஆட்சி செய்கின்ற அரசாங்கங்கள் அக்கறைக்காட்டுவதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் வடக்கு கிழக்கு மலையகத் தமிழர்களை ஒருங்கிணைத்து செயற்படும் ஈரோஸ்ஜனநாயகமுன்னணிதன்னுடைய பொறுப்பை நன்கு உணர்கிறது.

ஆகவே தான் 1975 ஆம் ஆண்டு தோழர் இரத்தினசபாபதி அவர்களால் உருவாக்கப்பட்ட ஈரோஸ் அமைப்பு ஆயுத போராட்டக்காலத்திலும் சரி 1987 ஆம் ஆண்டு ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்குள் இணைத்துக்கொண்டபோதும் சரி 1991 ஆம் ஆண்டுக்கு பின் தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு இடையூறு செய்யாமல் மௌனித்திருந்த காலத்திலும் சரி பின் 2015 மீண்டும் ஈரோஸ் அமைப்பின் அரசியல் கட்சியாக ஈரோஸ் ஜனநாயக முன்னணியை பிரகடனப்படுத்தியபோதும் சரி நாம் மக்கள் பக்கம் நின்று எமது முடிவுகளை எடுத்திருக்கின்றோம்.

அதே போன்றே இன்றைய நெருக்டியான காலத்திலும்ஈரோஸ்ஜனநாயகமுன்னணியும் ஒரு பொறுப்புவாய்ந்த அரசியல் கட்சியாக மக்களின் நலனை கருத்திற்கொண்டு எமது அரசியல் தீர்மானத்தை அறிவிப்போம். தமிழ்பேசும்மக்கள்அரசியல்செயற்பாடுகளில் நம்பிக்கை இழந்திருந்த நிலையிலேயே மாற்று அரசியல் சக்தியாக ஈரோஸ் ஜனநாயக முன்னணியைபிரகடனப்படுத்தினோம். கடந்த அரசியல் செயற்பாடுகளில் திருப்பதியடைந்த தேர்தல்கள் ஆணைக்குழு ஈரோஸ் ஜனநாயக முன்னணியை அங்கீரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவு செய்துள்ளது. ஈரோஸ் அமைப்பின் தொடர்ச்சியாகவே ஈரோஸ் ஜனநாயக முன்னணி செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. கடந்த 09வருடங்களாகமெதுவாகவென்றாலும்வடக்கு கிழக்கு மலையகத்தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்தவும் அரசியல் உரிமைகளை வெற்றெடுக்கவும் சரியான திசையை நோக்கி சென்றுக்கொண்டிருக்கின்றோம்.

ஆகவே இந்த நாட்டில் இருக்கின்ற வடக்கு கிழக்கு, மலையகத்தில்வாழுகின்றஒட்டுமொத்த தமிழ் பேசும் சமூகங்களின் எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் ஈரேஸ் ஜனநாயக முன்னணி தன்னுடைய காத்திரமான அரசியல் வீரியமாக முன்னெடுக்கும்.

மேலும் நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழ் பேசும் மக்கள் உட்பட இலங்கை மக்களுக்கு பெருத்த நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருக்கையில் புதிதாக அதனைவிடவும் மோசமான சட்டத்தை இலங்கையில் கொண்டுவருவது என்பது இலங்கை மக்களது ஜனநாயகஉரிமையைப்பறிப்பதோடுமக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதாகவும் இருக்கும். மக்கள் பாதிக்கப்படும்போது அவர்களது எதிர்ப்பை காட்டுவதற்கு முடியாது கையறு நிலையில் மக்கள் வாழக்கூடிய சூழல் உருவாகலாம். ஆகவே மக்களை ஒடுக்குகின்ற அனைத்து செயற்பாடுகளையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதோடு 2025 தேர்தல் ஆண்டாக எதிர்வு கூறப்படுகின்றது. மக்கள்விரக்தியின்உச்சத்தில் இருக்கின்றனர். இந்தி நிலையில் ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்று அனுமானிக்க முடியாத அரசியல் சூழல் இருக்கின்றது.

அதே நேரம் இன்னொருபக்கம் தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் நிறுத்துவது தொடர்பாகவும் பேசப்படுகின்றது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதியை தெரிவுசெய்வதில் தமிழ்மக்களின் வாக்குகள் மிக பெறுமதியாக இருக்கப் போகின்றது. இதை எவ்வாறு நமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளாம் என ஆராயவேண்டும். ஆகவே ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக மக்களோடும் மக்கள் நலன்சார்ந்த

தொடர்ச்சி 10 ம் பக்கம்.....



காலைக்கதிர் Kalaikkathir

## புதுப்பிக்கத்தக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சுவிஸ்சர்லாந்தின் டாவோஸ் நகரில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சுவிஸ் - ஆசிய வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்த 'பசுமை தொழில்நுட்ப மன்றத்தில்' கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

காலநிலை மாற்றத்தைத் தணிக்க உலகளாவிய நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. இதற்காக பல்வேறு அர்ப்பணிப்புகளைச் செய்த பல உலகளாவிய மன்றங்கள் உள்ளன. இருப்பினும், இதற்காக அர்ப்பணிப்பதைவிட செயற்பாடு குறைந்த மட்டத்திலேயே உள்ளது. உலகளாவிய தலைமைத்துவத்தில் ஏற்பட்ட இந்த தோல்வியின் விளைவுகளைப் பெரும்பாலும் பூகோளத்தின் தெற்கின் வளர்ந்து வரும் நாடுகளே சுமக்க நேரிடுகிறது.

பொதுவான காலத்தைவிட வறட்சி நீண்ட காலம் நீடிப்பது விவசாய உற்பத்திக்கு இடையூறு விளைவிக்கும்போது நமது உணவு பாதுகாப்பு ஆபத்தில் தள்ளப்படுகிறது. மேலும், தாமதமான பருவமழை காரணமாக நீர்மின் உற்பத்தி தடைபடும்போது நமது எரிசக்தி பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது.

வறட்சியின் நிறைவில் வெள்ளம் நிலைமை ஏற்படுகிறது. குறிப்பாக, சாதாரண மக்களின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் சீர்குலைக்கிறது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அசாதாரணமானது என்பது இதிலிருந்து மிகத் தெளிவாகத் தெரிகிறது.

காலநிலை நீதி தொடர்பான பிரச்சினையைப்போன்று அதனைத் தணிக்கவும் பூகோளத்தின் தெற்கு நாடுகளுக்கு மேம்பட்ட பொருளாதாரங்களின் வலுவான பங்களிப்பின் அவசியத்தையும் இது காட்டுகிறது.

காலநிலை மாற்றத்தைத் தணிக்க இலங்கை உறுதிபூண்டுள்ளது என்பதை வலியுறுத்த வேண்டும். டுபாயில் நடைபெற்ற ஸீநுஊ 28 மாநாட்டில் 'வெப்பமண்டல முன்முயற்சி' ஆரம்பிக்கப்பட்டது. இது வெப்பமண்டல நாடுகளில் காடுகள், எரிசக்தி, சமுத்திரம் மற்றும் சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும் திட்டத்தை உருவாக்குகிறது.

அத்தகைய முயற்சிகளின் ஒரு முக்கிய அங்கமான, புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் நமது முயற்சிகளுக்கு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான நீண்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். சுதந்திரத்திற்குப் பிறகு, இலங்கை நீர் மின் உற்பத்தியில் விரிவான வலையமைப்பை உருவாக்கியது. 1950இல் அதன் முதல் பெரும் நீர்மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இது நான்கு நீர்த்தேக்கங்களைக் கொண்டுள்ளது. அதன் பின்னர் நாட்டின் ஆற்றல் தேவைக்காக மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்தோம். இவ்வாறு ஐந்து பிரதான நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டு ஆறாவது நீர்த்தேக்கமாக வளவே கங்கை திட்டம் இணைக்கப்பட்டது. மகாவலி கங்கைத் திட்டத்தின் இறுதிக் கட்டம் ஏழு வருடங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது.

இன்றும், இலங்கையின் மின்சார உற்பத்தித் திறனில் சுமார் 40 சதவீதம் நீர் மின்சாரமாகும். நீர் மின்சாரம் உகந்த அளவில் பயன்படுத்தப்பட்டதால், காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தியை தேசிய மின் கட்டமைப்பில் ஒருங்கிணைக்கவும் அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2030ஆம் ஆண்டளவில் இலங்கையின் மின்சாரத் தேவையில் 70 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்வதை உறுதிசெய்வதற்காக அரசு தற்போது இந்த செயல்முறையை துரிதப்படுத்தியுள்ளது. இந்த இலக்கை அடைய 11.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை பெரும் முதலீடு தேவைப்படுகிறது. இருப்பினும், அண்மைக் காலம் வரை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் தனியார் துறை முதலீட்டிற்கான கட்டமைப்பு மிகவும் சாதகமாக இல்லை.

கடந்த 2 ஆண்டுகளில், இந்தக் குறைபாடுகளைச் சீர் செய்யவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கு உகந்த முதலீட்டுச் சூழலை உருவாக்கவும் அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### நிதி மறுசீரமைப்புகள்

அதன் முதலாவது முன்னெடுப்பாக, செலவு பிரதிபலிப்பு கட்டண முறையை உருவாக்க வேண்டும். 2014 மற்றும் 2022இற்கு இடையில், இலங்கையில் மின்சார கட்டணத்தில் திருத்தம் எதுவும் செய்யப்படவில்லை. இதனால் இலங்கை மின்சார சபைக்கு பணம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டதுடன் சில சந்தர்ப்பங்களில் மின்சார விநியோகஸ்தர்களுக்கான கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்பட்டது.

இருப்பினும், ஒகஸ்ட் 2022 முதல், இது செலவு-பிரதிபலிப்பு விலை சூத்திரத்திற்கு மாறியது. அதன்படி, எதிர்கால மின் உற்பத்தி செலவைப் பிரதிபலிக்கும் வகையில், ஒவ்வொரு காலாண்டிலும் மின் கட்டணங்கள் மறுசீரமைக்கப்படுகின்றன. நீண்ட காலமாக நஷ்டத்தில் இயங்கி வந்த இலங்கை மின்சார சபை 2023 ஆம் ஆண்டு இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியதன் மூலம் ஏற்கனவே இருந்த கடன்களை கணிசமான அளவில் செலுத்த முடிந்தது.

இந்த நிறுவனம் இப்போது வலுவான இருப்புநிலை மற்றும் வலுவான பணப்புழக்க நிலை மற்றும் நிதி பணப் புழக்கத்தை உறுதி செய்யும் கட்டண அறவீட்டு முறையொன்றைக் கொண்டுள்ளது. உள்ளக மறுசீரமைப்புகள், பசுமை நிதியை ஈர்ப்பதற்கான கட்டமைப்பையும் நாங்கள் தயாரித்து வருகிறோம்.

நிலையான நிதிக்கான வரைபடம், பசுமை நிதி வகைப் படுத்தல், நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான முதலீட்டாளர் வரைபடம் (றீம்பு) மற்றும் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் பசுமைப் பிணைப்புக் கட்டமைப் பிற்கான வரைப்படம் ஆகியவை ஊடாக இலங்கைக்கு பலமான காலநிலை நிதியியலைப் பலப்படுத்தி தேவையான சூழல் உருவாக்கப்படுகிறது. நிலையான நிதியுதவியை வழங்குவது இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடுகளுக்கு கூடுதல் ஊக்கத்தை அளிக்கும்.

### சட்ட சீர்திருத்தங்கள்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் பாரிய அளவிலான தனியார் துறை முதலீடுகளுக்கு சட்டரீதியான தடைகள் உள்ளன. 2022 இல் கொண்டுவரப்பட்ட மின்சாரச் சட்டத் திருத்தம் அந்தச் சட்டத் தடைகளை நீக்குவதற்கான இரண்டாவது படியாகும்.

### நிறுவன சீர்திருத்தங்கள்

மூன்றாவதாக, இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் இறுதிக் கட்டத்தில் எமது ஆட்சி உள்ளது. இது மின்சார சபையின் விநியோகம், உற்பத்தி மற்றும் பரிமாற்றத்தில் அதிக நிதி மற்றும் செயல்பாட்டு சுதந்திரத்தை உருவாக்கும். இதன் விளைவாக போட்டித்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஏற்படும்.

மின் உற்பத்தியில் தனியார் துறை பங்களிப்பு ஏற்கனவே நடைபெற்று வருகிறது, இந்த மறுசீரமைப்பு திட்டத்தின் மூலம் தனியார் துறை பங்கேற்புக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் இந்தப் பெரும் மறுசீரமைப்புகள், நுகர்வோர் மற்றும் மிகவும் போட்டி மற்றும் திறமையான மின் உற்பத்தியாளர்களுக்கு அதிக உற்பத்தி வாய்ப்புகளை உருவாக்குகின்றன. மின்சார சபை திறமையாகச் செயல்படுவதையும் இது உறுதி செய்கிறது. இந்த மறுசீரமைப்புக்கான சட்ட வரைவு கடந்த மாதம் வெளியிடப்பட்டது.

### உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்

குறிப்பாக 2026 ஆம் ஆண்டளவில் நாட்டின் தேசிய மின்சாரத் தேவைகளில் 70 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக, கட்டமைப்பின் செயல்திறனை மேம்படுத்தவும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஒருங்கிணைக்கவும் மேம்பாடுகள் அவசியம். களஞ்சியப்படுத்தல், பரிமாற்றம் மற்றும் விநியோகம் ஆகியவற்றிலும் முதலீடு தேவைப்படுகிறது. 2030ஆம் ஆண்டு வரை இந்த ஒருங்கிணைப்புக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றின் செயல்படுத்தல் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.

### எதிர்கால நோக்கு

கடந்த இரண்டு ஆண்டுகளில் எரிசக்தி துறையில் செயல்படுத்தப்பட்ட முக்கிய மறுசீரமைப்புகள் இந்தத் துறையில் மீண்டும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. பெருமளவிலான சூரிய மற்றும் காற்றாலை ஆற்றல் திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவின் முன்னணி வர்த்தக நிறுவனம் 350 மெகாவாட் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்ய முன்வந்துள்ளது. இது 2025இல் தொடங்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் மேலும் 750 மில்லியன் டொலர்களை காற்றாலை ஆற்றலில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. அதன்படி காற்றாலை மின்சாரம் இலங்கைக்கு பெரும் வாய்ப்பை வழங்குகிறது.

குறிப்பாக கடலோர காற்றாலை மின்சாரத்தின் ஊடாக இலங்கையால் தேவைக்கும் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சாத்தியம் உள்ளதாக உலக வங்கியின் அண்மைய அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எரிசக்தி தொடர்பை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் முற்போக்கான கட்டத்தில் உள்ளன. மேலதிக மின்சாரத்தை, குறிப்பாக இந்தியாவின் தென்பகுதியில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்துறைப் பகுதிக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது.

சூரிய சக்தி மின் உற்பத்திக்கும் அதிக வாய்ப்பு உள்ளது. கூரைகளில் பொருத்தப்படும் சூரிய தகடுகளினால் உருவாக்கப்படும் ஆற்றலைத் தவிர, சூரிய சக்தி ஆற்றல் சுமார் 200 ஜிகாவாட் ஆகும். அதன்படி, மொத்த அளவை அதிகரிக்க வேண்டும். இது இலங்கையின் காற்றாலை சக்தியைவிட அதிகம். இலங்கையில் பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியாவின் சாத்தியக்கூறுகளையும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்.

இலங்கையின் நிலையான, பசுமையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்கான நம்பிக்கைக்குரிய திட்டங்கள் உள்ளன. 2050ஆம் ஆண்டளவில் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைய இலங்கை உறுதிபூண்டுள்ளது.

துரித புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம் இந்த முழு முயற்சியின் ஒரு முக்கிய அங்கமாகும், மேலும் இது ஆற்றல் பாதுகாப்பிற்கான இன்றியமையாத படியாகும்.

இலங்கை தற்போது வறட்சிக் காலத்தில் அதிக விலைகூடிய எரிபொருளைச் சார்ந்து இருப்பதால், இந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் உற்பத்திச் செலவைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

இலங்கை தற்போது காலநிலை மாற்றத்தைத் தணித்தல் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இது பசுமை ஆற்றலுக்கான தற்போதைய வாய்ப்புகளை மேலும் திறந்துவிடும்.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்கையின் திசையை பல்வேறு உந்துதல்களும் பங்குதாரர்களும் ஆதரிக்கின்றனர் என்பது தெளிவாகிறது. எனவே, முதலீட்டாளர்கள் இந்தத் துறையில் உயர்தரம் மற்றும் நிலையான கொள்கையை எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்வதற்கு இதுவே சிறந்த தருணம். மேலும் இதுபோன்ற முதலீடுகள் எதிர்வரும் தசாப்தங்களில் அதன் பங்குதாரர்களுக்கும் இலங்கை நுகர்வோருக்கும் அதிக வருமானத்தை தரும் என்பதில் எனக்கு எதுவித சந்தேகமும் கிடையாது என்றார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமெனவும் அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையைப்போன்று சுமார் 75 அரசியல் கட்சிகள் இருக்கும் நாடு உலகில் வேறு எங்கும் இல்லை. அதனால் நம் நாட்டில் பிளவுகள் உருவாகியுள்ளன. இது நாட்டில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலை சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில் பல அழிவுகளுக்கும் வழிவகுத்தது. இந்தக் கட்சிகளுக்கு எப்படி பணம் கிடைக்கிறது? யார் செலவு செய்கிறார்கள் என்பதை கண்காணிக்க எந்த முறைமையும் இல்லை. எனவே இந்தக் கட்சிகள் எவ்வாறு தேர்தலில் பணத்தை செலவிடுகின்றன என்பதை கண்டறியக் கூடிய சட்டமூலத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளார். அதற்குக் காரணம், அதலபாதாளத்திற்குச் சென்ற நாட்டை சுமார் ஒரு வருடம் ஆறு மாதங்களில் மீண்டும் அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு சென்றமையேயாகும். ஜனாதிபதி ஒவ்வொரு வெளிநாட்டு பயணத்தையும் அந்த நோக்கத்திற்காகத் திறம்படப் பயன்படுத்தினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

2020ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட எமது கட்சியின் விஞ்ஞாபனம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். அப்படியானால், அவர்கள் தோற்கடித்த விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எரிபொருள், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடின்றி அனுபவிக்கின்றார்கள் என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். அந்த ஆவணத்தால்தான் இன்று நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

டோக்கியோ மாநாட்டில் அன்று நாம் முன்வைத்த இலங்கையை மீட்டெடுப்போம் என்ற நூலில் உள்ள விடயங்களை ஆளும் தரப்பு இன்று நடைமுறைப்படுத்துகின்றது. இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் அதனைப் படிக்க வேண்டும்.

இனி ஒருவரையொருவர் விமர்சிப்பதில் அர்த்தமில்லை. வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆளும் தரப்பு முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழியில்லை. அந்தத் திட்டத்தால் இன்று மக்கள் வரிசையில் நிற்காமல் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, இதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு ஆதரவளிக்க வேண்டும். இந்தப் பயணத்தை யாரேனும் மாற்றினால் அதற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும். அரசியல் இலாபங்களுக்காக சில சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட்ட சில பொய்யான அறிக்கைகளுக்கு அதனை முன்வைத்த அந்தக் கட்சிகளே பொறுப்பேற்க வேண்டும்.

2022ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றபோது, இந்த நாட்டில் அரசியல் செய்யும் திறமை எவருக்கும் இருக்கவில்லை. எந்த ஒரு அபிவிருத்திப் பணியையும் செய்ய யாருக்கும் பலம் இல்லை. மூன்று வருடங்களாக தடைப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்க முடிந்துள்ளது.

ஆனால் சில கட்சிகள் இந்நாட்டின் அபிவிருத்திப் போக்கை சீர்குலைக்க முயற்சிக்கின்றன. அந்தக் குழுவினர் இந்த நாட்களில் வேலைநிறுத்த அலைகளைத் தொடங்கியுள்ளனர். இதை உலகம் முழுவதும் பரப்பி, இங்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை குறைக்க முயற்சி செய்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க முயற்சிக்கலாம். அதன் மூலம் எமது நாட்டுக்கு பல பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

கடன் மறுசீரமைப்புக்காக, ஜப்பான் மற்றும் பாரிஸ் கிளப்புடன் ஒரு ஒப்பந்தமும், சீனாவுடன் மற்றொரு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட உள்ளன. அதன் மூலம், பெப்ரவரி மாதத்திற்குப் பிறகு, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெய்கா நிறுவனம் மற்றும் நட்பு நாடுகளின் ஆதரவுடன் நாட்டை முன்னேற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அதை சீர்குலைக்க சில கட்சிகள் முயற்சி செய்யலாம். இவ்வாறான முயற்சிகளை இனங்கண்டு முறியடிக்க வேண்டியது மக்களின் பொறுப்பு என்றார்.

## 72 சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கவுள்ளதாக நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அண்மையில் அமைச்சரவைக்கு அறிவித்த தீர்மானத்தைக் கண்டித்தே சுகாதார தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளன.

இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஆய்வுகூட தொழில்நுட்பவல்லுநர்கள், கதிரியக்கத் தொழில்நுட்பவல்லுநர்கள், மருந்தாளர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், மருந்து கலவையாளர்கள் மற்றும் பூச்சியியல் அதிகாரிகள் உள்ளிட்ட 72 சுகாதார சங்கங்களின் உறுப்பினர்கள் இதில் இணைந்து கொண்டுள்ளன.

எவ்வாறாயினும், மகப்பேற்று சிகிச்சை நிலையங்கள், சிறுவர் வைத்தியசாலைகள், புற்றுநோய் வைத்தியசாலைகளில் பணிப்புறக் கணிப்பு முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட தொழிற்சங்கங்கள் அனைத்தும் வைத்தியர்களுக்கு மாத்திரம் விசேட கொடுப்பனவை வழங்குவது நியாயமற்றது என்று விமர்சனம் செய்ததோடு தமக்கும் அரசு நியாமான முறையில் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தன.

இத்தொழிற்சங்க நடவடிக்கைகளால் வைத்தியசாலையில் வழமையான செயற்பாடுகள் நடைபெறவில்லை. இதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

இதேவேளை, சில தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்காமல் தீர்வினை வழங்குவதற்காக அரசுக்கு கால அவகாசத்தை வழங்க தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளன. குறிப்பாக அரச தாதியர் சங்கம் அவ்விதமான அறிவிப்பைச் செய்துள்ளதோடு, கொடுப்பனவுப் பிரச்சினைக்கு தீர்வுகாண அதிகாரிகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதாக அரச சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசெம்பரில் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கை தொடர்பான வேலைத்திட்டத்தின் முதலாவது மீளாய்வுக்கு அங்கீகாரம் வழங்கியதன் மூலம், 2024இல் இலங்கை ஸ்திரத்தன்மையிலிருந்து மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு நகர்வதற்கான களம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெறும் உலகப் பொருளாதார மன்றத்தின் 54ஆவது வருடாந்த கூட்டத்துடன் இணைந்ததாக நடைபெற்ற கலந்துரையாடலில், இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளில் எட்டப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போது, பல்வேறுசிரமங்களுக்குமத்தியிலும், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் இலங்கை குறிப்பிடத்தக்க செயற்திறனைப் பெற்றுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன்கடன்மறுசீரமைப்பு செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. கடன் வழங்குநர்களை கையாள்வதில் அவ்வாறான ஒத்துழைப்பு அவசியமாகும்.

வெளிநாட்டு நேரடி முதலீடு உள்ளிட்ட முதலீடுகள், ஏற்றுமதிகள் மற்றும் சேவைகள் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

இலங்கை எதிர்கொண்ட அண்மைய பொருளாதார நெருக்கடியானது வர்த்தகங்கள், சிறுதொழில்நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

வர்த்தகத்திற்கான தடைகள் மட்டுமன்றி மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகத்திற்கான இடையூறுகளை அகற்றுவதற்கு 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தியது, வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களில் பணப்புழக்கத்தை மீளமைத்து மற்றும் 1977இற்குப் பின்னர் முதல் முறையாக கொடுப்பனவுகளின் முதன்மை இருப்பு மேலதிக நிலைக்கு பதிவு செய்யப்பட்டது

2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து நிதி ஸ்திரத்தன்மை ஏற்படல், பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் மறைப் பெறுமான பொருளாதார வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டில் முதன்மை வரவு செலவுத் திட்டத்தில் மேலதிகத்தை எட்டுவது குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் அடையாளமாகும்.

சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் ஏனையதெற்காசியநாடுகளுடனான வர்த்தக வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் இணைவதற்கான இலங்கையின் முன்முயற்சி மற்றும் ஐரோப்பிய சந்தையை அணுகுவதற்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வழங்கும் நன்மைகள் முக்கியமானது.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, விவசாய நவீனமயமாக்கல், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம் மற்றும்உட்கட்டமைப்புஅபிவிருத்தி போன்றவற்றில் அரச – தனியார் பங்காளித்துவத்தைஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

சந்தை பிரவேசத்தை மேம்படுத்துதல், வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை உறுதிப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள்மற்றும்ஆணைக்குழுக்கள் முக்கிய பணிகளை வழங்குகின்றன. முதலீடு மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றேன் என்றார்.

# அழைப்பாணை வழங்கச்சென்ற பொலிஸாரின் அந்தரங்க உறுப்பில் தாக்கிய சிப்பாய் கைது

ஹோமாகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு நீதிமன்ற அழைப்பாணையை வழங்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய தாகக் கூறப்படும் இராணுவ சிப்பாய்மற்றும்பெண்ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளானவர் அத்துருகிரிய பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தராவார்.

இவர் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தொடர்பான வழக்கு ஒன்றின் நீதிமன்ற அழைப்பாணையை வழங்குவதற்காக சந்தேக நபரின் வீட்டிற்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய சந்தேக நபர்கள் வீட்டிற்குள் மது அருந்திக்கொண்டிருந்துள்ளனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்ற அழைப்பாணை தொடர்பில் சந்தேக நபரிடம் தகவல் கோரிய போது அவர்கள் பொலிஸ்உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரின் அந்தரங்க உறுப்பின் மீது தாக்கி யுள்ளனர்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் அத்துருகிரிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என அதுருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைஅத்துருகிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்கள் பட்டியலில் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் இருக்கின்றதாஇல்லையாஎன்பதை இப்போது கூறமுடியாது. அதுள்ளிட்ட விடயங்களை அரசியல் குழுவே தீர்மானிக்கும்

எம்மைப்பொறுத்தவரையில், நாட்டின் எதிர்காலத்துக்காக நாம் சிறந்த தீர்மானங்களை முன்னெடுப்போம். அதற்கு மக்கள் ஒத்துழைப்பினை வழங்குவார்கள் என்றார்.




# தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் ....

07 ம் பக்க தொடர்ச்சி.....

அமைப்புகளோடும்கலந்துரையாடிகட்சியின் நலன் கருதி முடிவை அறிவிப்போம். அரசாங்கத்தினுடைய வரி அதிகரிப்பானது ஒட்டுமொத்த மக்களையும் எதிரான கருத்துடையவர்களாக மாற்றியிருக்கிறது.

மக்கள் மீது மேலதிக சுமையை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது. இந்த சுமையைக் குறைப்பதற்கான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடவேண்டும்.அதற்குநாடாளுமன்றத்தில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்திற்கு அழுத்தத்தினை கொடுக்கவேண்டும் அவர்கள் அதை செய்யவில்லையென்றால் அவர்கள் ம

ஊனது மக்கள் அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தயாராகவேண்டும் மக்களோடு ஈரோஸ் ஜனநாயக முன்னணியும் கைகோர்த்துக்கொண்டு செயற்படும். மக்கள்விரோதசெயற்பாடுகளை ஆட்சியாளர்களோ வேறுயாரோ செய்கின்ற போது சமூக ஊடகங்களே மக்கள் மத்தியில் அதை கொண்டு செல்கின்றன.

ஆகவேசமூகஊடகங்களைஒடுக்குவதற்காக எடுக்கப்படுகின்ற இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்தினை நாங்கள் எதிர்க்கிறோம். ஏனென்றால் மக்களுடைய கருத்துச்சுதந்திரத்தை நிகழ் நிலை காப்புச் சட்டம் பறிக்கின்றது. இந்தச்சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடனான செயற்பாட்டில் எமது முன்னணியும் கைகோர்க்கும் அதே நேரத்தில் வடக்கு, கிழக்கு, மலையத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் சமூகங்கள் எதிர்நோக்குகின்றபிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைப்பதுதொடர்பாகவும், மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏனைய முற்போக்கு அரசியல் சக்திகளோடும், தென்பகுதியில் செயற்படும் சகோதர சிங்கள முற்போக்கு சக்திகளோடும் இனைந்து தமிழ்பேசும் நியாயமான கோரிக்கைகளை வலுப்படுத்துவோம் இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்கின்ற அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்கப் போவதாக தேர்தல் காலம் வரும் போது அறிவிப்பதும் பின் கிடப்பில் போடுவதும் கடந்த கால கசப்பான வரலாறாகும்.

இது ஒரு தேர்தல் கால செயற்பாடாக இல்லாமல் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்போடும் நேர்மையோடும் செயற்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு துணிந்து முடிவெடுக்கூடிய ஜனாதிபதி ஒருவரை இந்நாடுபெற்றாகவேண்டும். அதைமக்களே சாத்தியமாக்கவேண்டும் இந்த நேரத்தில் ஆரம்பகாலத்திலிருந்துஈரோஸ்அமைப்புடன் இணைந்திருந்தஅத்தனைதோழர்களையும் ஈரோஸ் ஜனநாயக முன்னணியோடு இணைந்துக்கொள்ளுமாறு பகிரங்க அழைப்பினைவிடுக்கிறோம்அதோடுஎமது அரசியல்செயற்பாட்டுக்குஇலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களின் ஒத்துழைப்புகளை வேண்டுகிறோம். - என்றார். (05)

# வினாத்தாள் வெளியான விவகாரம்: அம்பாறை ஆசிரியர் ஒருவர் கைது

க.பொ.த உயர்தர பரீட்சைக்கான விவசாய விஞ்ஞான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியான சம்பவம்தொடர்பில் அம்பாறையைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறையைச் சேர்ந்த ஆண் ஆசிரியர் ஒருவரே குற்றப் புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (05)

# வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக யாழில் ரூ. ஒரு கோடிக்கு மேல் மோசடி

## ஒருவர் கைது

வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பதாக சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி அல்வாய் பகுதியை சேர்ந்த 41வயதுடைய நபர் ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவை சேர்ந்த நபரை இத்தாலி நாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 23 லட்சம் ரூபா பணத்தை பெற்று மோசடி செய்யப்பட்ட சம்பவம்தொடர்பில்பாதிக்கப்பட்டநபரால்யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின்பிரகாரம்பொலிஸார்முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில், சந்தேகநபர் நெல்லியடி பொலிஸ் பிரிவினுள் பதுங்கி இருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அங்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 நபர்களிடம் வெளிநாடு அனுப்பி வைப்பதாக கூறி சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

தொடர்ந்தும் சந்தேகநபரை பொலிஸ் காவலில் வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் . (05)

# சிறுவன் துஷ்பிரயோகம் நடன ஆசிரியர் கைது

சிறுவன் ஒருவனைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் நடன ஆசிரியர் ஒருவர் பிலியந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை பெலன்வத்தை பகுதியில் வகுப்பு முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த 12 வயதான சிறுவனை நடன ஆசிரியர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ளார்.

மோட்டார் சைக்கிள் சிறிது தூரம் சென்று கொண்டிருந்தபோது சந்தேக நபரின் உடலைப் பிடித்துக் கொண்டிருந்த சிறுவனுக்கு தனது அந்தரங்கைப் பகுதியை காட்டி அதனைப்பிடிக்குமாறுகூறிசிறுவனை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் மாணவனை ஏற்றிச் சென்றபோது நடந்து கொண்ட விதம் சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை, சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபின்னர்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

(05)

# ஹரக்கட்டாவுடன் தொடர்பெடுத்து பேசிய மிதிகம ருவனின் சகோதரி அதிரடிக் கைது

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஹரக்கட்டாவுடன் தொலைபேசியில் உரையாடியதாகக் கூறப்படும் மிதிகம ருவன் என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் சகோதரி ஒருவர் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வெலிகம பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் எனவும் அவர் மிதிகம ருவன் என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் சகோதரி எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை கைது செய்யப்பட்டுள்ள 7 சந்தேக நபர்களும் புதுக்கடை பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (05)

# வவுனியா தாண்டிக்குளம் பாடசாலையில் திருட்டு

## பொலிஸார் விசாரணை



வவுனியாதாண்டிக்குளம்பகுதியில் ஏ9 வீதியில் அமைந்துள்ள பிரமண்டு வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை உடைத்து திருடப்பட்ட சம்பவம் தொடர்பில்பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பாடசாலையில் திறன் வகுப்பறையின் பூட்டு உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சி திருடப்பட்டமை தொடர்பில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள்வவுனியாபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இச்சம்பவம்தொடர்பில்பாடசாலைக்கு வவுனியா பொலிஸ் நிலையகுற்றத்தடுப்புபிரிவுபொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளதுடன் பாடசாலைக்கு அரு கேயுள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி காணொளிகளையும் பரிசோதித்தனர்.

இதன்போதே கடந்த வெள்ளிக் கிழமை 15வயதுடைய சிறுவன் ஒருவன் தொலைக்காட்சியை தூக்கிச் செல்வது சிசிரிவியில் பதிவாகியுள்ளது. இந்தக் காடசிகளின்அடிப்படையில் சந்தேக நபரான சிறுவனை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர். (05)



# மூன்று கிலோ ஐஸ் போதையுடன் வத்தளையைச் சேர்ந்தவர் கைது



மூன்று கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 30 வயதுடைய வத்தளைப் பகுதியைச் சேர்ந்தவர் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

சனிக்கிழமை இரவு புத்தளம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

குறித்த நபர் கற்பிட்டியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸொன்றில் ஐஸ் போதைப்பொருளை கொண்டு சென்று பாலாவியிப் பகுதியில் இறங்கி மற்றொரு பஸ்ஸொன்றில் போதைப்பொருளை கொண்டு சென்றுள்ளார்.

இதனையடுத்து அவர் பயணித்த பஸ்ஸை குறிஞ்சிப்பிட்டி பகுதியில் வைத்து புலனாய்வு அதிகாரிகள் சோதனையிட்டபோது சூட்சமமான முறையில்மறைத்துவைத்திருந்த 3 கிலோ ஐஸ் போதைப்பொருள் பொதிகளை பொலிஸார் கைப்பற்றினர். இதன் பெறுமதி 3 கோடி ரூபாவிற்கும் அதிகம் என அதிகாரிகள் தெரிவித்தனர் .

கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளையும் நீதிமன்றத்தில்முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகவும் புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது . (05)



# நுவரெலியா எல்லைக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் சோதனை

நுவரெலியா பொலிஸ் எல்லைக்குள்பிரவேசிக்கும்அனைத்து வாகனங்களையும் சோதனை செய்யும் நடவடிக்கைகள் இந்த நாள்களிலும்தொடரும்எனநுவரெலியா தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர்பிரேமலால்ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பாடசாலை விடுமுறை நாள்களில் நுவரெலியாவுக்கு வரும் உள்நாட்டு மற்றும்வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், போதைப்பொருள் புழக்கத்தை குறைக்கும் வகையிலேயே இது அமைந்துள்ளது. யுக்திய நடவடிக்கைக்குஇணையாகஇத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்படி நுவரெலியா பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நுவரெலியா நகர எல்லைக்குள்பிரவேசிக்கும்அனைத்து வாகனங்களையும் இரவு பகலாக சோதனையிடுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

DOWNLOAD PASSENGER APP

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 0706563213

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர் Kalaikkathir

# புலிகள் மீதான தடையை நீக்க பிரிட்டனில் சட்டப் போராட்டம்

## நாடு கடந்த தமிழீழ அரசு தீர்மானம்



பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள்மீதானதடையைநீக்குவதற்கானதொடர் சட்ட போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக நாடுகடந்ததமிழீழஅரசாங்கம்அறிவித்துள்ளது.

இதுதொடர்பில்நாடுகடந்ததமிழீழஅரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

மௌனிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் மீதான நீதியற்ற தடையை சவாலுக்குட்படுத்தவும், சிறீலங்காவில் இனவழிப்புக்கான மறைமுக ஆதரவை இல்லாமல் செய்யவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது தடை செய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடம்மேன்முறையிட்டிருந்தது.

பிரித்தானியஉள்துறைசெயலாளர்தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்த முறைமை நீதிக் கோட்பாடுகளுக்கு முரணானது என்றும், அதன் காரணமாக சட்ட வலுவற்றது என்றும் கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21ஆம் திகதி ஆணைக்குழு தீர்ப்பளித்திருந்தது.

அச்சட்டவிரோதச்செயலுக்கு பரிகாரமாக, பிரித்தானிய உள்துறை செயலாளர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை தொடர்பான முடிவை மீள் பரிசீலனை செய்யும்படி உத்தரவிட்டு இருந்தது.

பிரித்தானிய உள்துறை செயலாளர் மீண்டும் கடந்த 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் 31ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்குள் பேணும் தனது முடிவை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தார்.

இந்த முடிவிற்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மேன்முறையீடு செய்திருந்தது.

2022 ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்திருந்த இந்த வழக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு வருகின்றது..

நீதியற்றம் இந்தத் தடையை நீக்கும் செயற்பாடுகள் மற்றும் சட்ட சவாலுக்கான இந்தமேன்முறையீடானதுஅடுத்தகட்டத்துக்கு நகர்வது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கடமை என்பதை உணர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இந்த நீதி போராட்டத்திற்கு அனைவரும் கரம் கொடுப்போம் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(05)

# கிழக்கு அபிவிருத்தி பணிகளை பாராட்டிய நாணய நிதியம்



சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் திருகோணமலையிலுள்ளகிழக்குமாகாணஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானைச் சந்தித்து கலந்துரையாடினர்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும்அபிவிருத்தித் திட்டங்கள், வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாணம் குறுகிய காலத்தில் அடைந்து வரும் வளர்ச்சிக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் பீட்டர் ப்ரூயர் (சிரேஷ்ட பணித் தலைவர்), சர்வத் ஜஹான் (ஐஆகு வதிவிடப் பிரதிநிதி), சோபியா ஜாங் (சிரேஷ்ட பொருளாதார நிபுணர்), ஓஹய் மியாவ் (சிரே0ஷ்ட நிதித்துறை நிபுணர்), ஹோடா செலிம் (சிரேஷ்ட பொருளாதார நிபுணர்), டிமிட்ரி ரோஸ்கோவ் (சிரேஷ்ட பொருளாதார நிபுணர்), சந்தேஸ் தூங்கானா (பொருளாதார நிபுணர்), மற்றும் மனவே அபேயவிக்ரம (உள்ளூர் பொருளாதார நிபுணர்) ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# ஒரு சீன கொள்கையில் இலங்கை உறுதியாம்

## அலி சப்ரி கூறுகிறார்



ஒரு சீனா கொள்கையில் உறுதியாகயிருப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

தாய்வானின்ஜனாதிபதிதேர்தலில் அந்த நாட்டின் இறைமையை வலியுறுத்தும் வில்லியம் லாய் சிங் வெற்றிபெற்றுள்ள நிலையிலேயே இலங்கை மீண்டும்தனதுநிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது.

தாய்வானில் தேர்தல்கள் அமைதியாக நடந்து முடிந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஒரு சீனா கொள்கைகளை முன்னிறுத்துவதில் பின்பற்றுவதில் தொடர்ந்தும்உறுதியாகஉள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

சீனாவின் இணக்கமான மீள்ஒருங்கிணைப்பை விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# ரணிலைப் பொது வேட்பாளராக புத்தாண்டுக்குமுன் அறிவிப்போம்

## முன்னாள் எம்.பி. ஜி.ஹரிசன் உறுதி



சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக அறிவிப்போம்.ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஹரிசன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டுஉரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதாரநெருக்கடியின்போது அரசாங்கத்தைப் பொறுப்பேற்காமல் தப்பிச் சென்றவர்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு தயார் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். இந்த ஆண்டு இடம்பெறவுள்ளஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் தகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே உள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு அரசாங்கத்தைபொறுப்பேற்பதில்ஆசை ஆனால்பயம். இவரதுதயக்கத்துக்காக நாட்டை நெருக்கடிக்குள்ளாக்க முடியாது என்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தார்.

பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது,ஆகவே பொருளாதார ரீதியில் ஸ்திரமடைய வேண்டுமாயின் தற்போதைய பொருளாதாரக்கொள்கைகள்தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டும்.அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச நிர்வாகம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும்.

சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக அறிவிப்போம்.ஐக்கியமக்கள்சக்தியின் பெரும்பாலானவர்கள்ஜனாதிபதியுடன் ஒன்றிணைவார்கள்.ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கைகளை ஐக்கிய மக்கள் சக்தியினர் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.குறுகிய அரசியல்நோக்கங்களுக்காக அதனை பகிரங்கமாக குறிப்பிட மறுக்கிறார்கள். - என்றார். (05)

# உள்நாட்டு பிரச்சினைகளிற்கு தீர்வுகண்டபின் சர்வதேச கடற்பரப்பை பாதுகாக்க செல்லலாம்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் இடித்துரைப்பு



அரசாங்கம் சர்வதேச கடற்பரப்பைப் பாதுகாப்பதற்கு முன்னர் உள்நாட்டில்காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வைக்காணவேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் கருத்து வெளியிட்டுள்ளார்.

சர்வதேச கடற்பரப்பிற்கு கப்பலை அனுப்பும்அரசாங்கத்தின் தீர்மானத்தை விமர்சித்துள்ள அவர், உள்நாட்டில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொரளை தேவலாயத்தில் இரண்டு வருடங்களிற்கு முன்னர் கைக்குண்டு மீட்கப்பட்டதை குறிப்பதற்காக இடம்பெற்ற விசேட ஆராதனையின்போது இதனைத் தெரிவித்துள்ள அவர், இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும் கைக்குண்டை வைத்த உண்மையான குற்றவாளி யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அதிகாரிகள் தவறிவிட்டனர் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் யார்? ஊடகங்களைத் துன்புறுத்தியவர்கள் யார்? என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அதிகாரிகள் தவறியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் நீதியின் முன்நிறுத்தப்படுவார்களா என்பதைப்பார்ப்பதற்காகநாங்கள்காத்திருக்கின்றோம். பிரகீத் எக்னலிகொடவின் கொலைக்கு யார் காரணம் என்பதும் லசந்தவை யார் கொலை செய்தார்கள் என்பதும் எவருக்கும் இதுவரை தெரியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்தும் மூடிமறைக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் உள்நாட்டு பிரச்சினைகளிற்குத்தீர்வைக் காண்பதற்கு பதில் சர்வதேச கடற்பரப்பைப் பாதுகாப்பதற்கே முன்னுரிமை வழங்குகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு தேர்தல்களின் ஆண்டு என அறிகின்றோம் இந்த தடவை சரியான தலைவர்களிடம் மக்கள் ஆட்சியை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
FESTA JUNINA
POP CORN
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILEzone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர்
Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர் Kalaikkathir

## இறப்பர் பட்டி கழுத்தில் இறுகி 9 வயது மாணவன் உயிரிழப்பு

கலவான பொதுப்பிட்டிய, பனாபொல பிரதேசத்தில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன், இறப்பர் பட்டி கழுத்து இறுக்கியதில் உயிரிழந்துள்ளதாக பொத்துப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பனாபொல கங்கனமல பகுதியைச் சேர்ந்த ஒன்பது வயதுடைய ககனா என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவன் பாடசாலை ஒன்றில் நான்காம் வகுப்பில் கல்வி கற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுவன் தனது வீட்டில் இறப்பர் பட்டி ஒன்றை இரும்பு ஒன்றில் கட்டி சுழற்றியதாகவும், பின்னர் அந்த இறப்பர் பட்டி கழுத்தில் இறுகியதாகவும் விசாரணையில் தெரிய வந்ததாக பொத்துப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். (05)

## சமூக சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வு



கோண்டாவில் நெட்டிலிப்பாயில் நடைபெற்ற முதியோர் தின விழாவில் சமாதான நீதிவானும் பிரபல சமூக சேவையாளருமான தொழிலதிபர் லயன் துரை பிரணவன் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

லயன் துரை பிரணவனின் சமூக சேவைக்காகவும் நீதி அமைச்சால் சமாதான நீதிவான் பதவி பெற்றமைக்காகவும் அவரது சேவைகளை மேலும்; ஊக்குவிக்கவும் பிரதேச மக்களால் அவருக்கு நன்றிகூறும முகமாகவும் ஜே - 117 பிரிவு கிராம அலுவலர் ஜெயந்திரன் முன்னிலையில் அவரது ஒழுங்கமைப்பில் கௌரவிப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## பெண்ணின் கழுத்திலிருந்த நகையைத் திருடியவர் சாவு

பெண்ணொருவரின் கழுத்தில் இருந்த தங்க நகையை திருடிச்சென்ற நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பாணந்துறை பிங்வல பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் பாணந்துறை பகுதியில் பெண்ணொருவரின் கழுத்திலிருந்த தங்க நகையை திருடிக்கொண்டு தப்பிச்சென்றபோது, அங்கிருந்த சிலர் அவரை மடக்கிப் பிடித்து கடுமையாக தாக்கி பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த நபர் கடுமையான தாக்கப்பட்டதால் பொலிஸார் பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்; எனப் பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர். (05)

## கைக்குண்டுடன் சந்தேகநபர் யாழ். இளவாலையில் கைது

யாழ்ப்பாணம், இளவாலை பகுதியில், கைக்குண்டுடன் சந்தேகநபர் ஒருவர் இளவாலை பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில் -

இளவாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றை உடைத்து திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர் என சந்தேகித்து, குறித்த சந்தேகநபரைக் கைது செய்வதற்காக இளவாலை பொலிஸார் அவரது வீட்டிற்கு சென்றனர்.

இதன்போது அவரது வீட்டில் இருந்து கைக்குண்டு கைப்பற்றப்பட்ட நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14th EDITION

# Jaffna International Trade Fair
# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2024

JANUARY ஜனவரி

19 20 21

10.00 மு.ப - 8.00 பி.ப

**Muttraweli Grounds**
(Next to Jaffna Fort)

**முற்றவெளி மைதானம்**
(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR — DIMO THE PERFECT PARTNER

GOLD SPONSORS — ADRIAN SOLAR GREEN, NIPPON CEMENT

MEDIA SPONSORS — PRINT: உதயன் | RADIO | TELEVISION: Capital | DIGITAL: காலைக்கதிர்

ORGANIZED BY — LECS LANKA EXHIBITION

IN ASSOCIATION WITH — CCIY

SILVER SPONSORS — Anchor, Soorya, Hayleys Solar, 4ever, Darley Butler, Elephant House, Keells Krest, PHOENIX, Rhino, Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com  www.jitf.lk  jitf.lk

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2024இல் வெளியிடப்பெற்றது.